வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.12.2024 சனிக்கிழமை இதழ் : 348 பக்கங்கள் : 12



படம் : ஐ.சிவசாந்தன்

## நல்லூரில் திருக்கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற் சவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வ மாக இடம்பெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான நேற்று மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று, வள்ளி, தேவசேனா சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக்கு மார சுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப் பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து நல்லூர் முருகப்பெருமான் வெளிவீதியுலா வந்தமை சிறப்பாக நடைபெற்றது. (அ)

# பதவியை துறந்தார் சபாநாயகர் ரன்வல!

## கலாநிதிப் பட்டம் தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து



கொழும்பு, டிசெம்பர் 14

**சபாநாயகர் கலாநிதி அசோக சபுமல் ரன்வல தனது பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.**

**அவரது பெயருக்கு முன்பாக இடப்பட்ட கலாநிதி பட்டம் குறித்து எழுந்த பெரும் சர்ச்சையை அடுத்தே அவர் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.**

தற்போதைய சபா நாயகர் அசோக ரன்வல கடந்த தேர்தலில் போட் டியிடுவதற்கு முன்பும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் சபாநாயகராக பதவியேற் றுக்கொண்ட போதும் தன்னை கலாநிதி என்றே அடையாளப்படுத்திக் கொண்டார்.

ஆனால் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இர சாயனப் பொறியியலில் பட்டம், ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக் கழகத்தில் முனைவர் பட் டமும் பெற்றிருப்பதாக குறிப்பிட்டு அவரது பெய ருடன் கலாநிதி என்ற பட் டம் பயன்படுத்தப்பட் டுள்ளது.

இது தொடர்பில் ஆட் சேபனை எழுந்த சந்தர்ப் பத்தில் அவர் அதனைத் தெளிவுபடுத்த முன்வர வில்லை.

இதனால் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மற்றும் எதிர்க் 11

## யாழ். மாவட்டத்தில் இதுவரையில் எலிக்காய்ச்சலால் 58 பேர் பாதிப்பு

வடமராட்சி, டிசெ. 14

யாழ். மாவட்டத்தில் இதுவரை எலிக் காய்ச்சல் நோயினால் 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

பருத்தித்துறை சுகா தார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், கர வெட்டி சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் 24 பேரும், மருதங்கேணி பிரிவில் 6 பெரும், சாவ கச்சேரி பிரிவில் 4 பேருமாக 11

## யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட் டில் நேற்று யாழ்.மாவட்ட செயல கத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக் கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் கலந்து கொண்டனர். 11

## அரிசி தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கப்படவில்லை

ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கை யும் எடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்ஜய பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். 11

## பயங்கரவாத சட்டம் உட்பட 20 சட்டங்கள் மறுபரிசீலனை!

நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்கான பணிகளை ஆரம்பித்து விட்டோம் என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர் ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அதேபோன்று, பாராளுமன்றத்தில் சட்ட மூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 11

சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லா தீர்மானத்தில் எதிர்க்கட்சி நேற்று கையெழுத்து!

கொழும்பு, டிசெ. 14

சபாநாயகர் அசோக ரன்வல தனக்கு கலாநிதி பட் டம் இருப்பதாக கூறி மக்களையும் அரசாங்கத்தை யும் ஏமாற்றியிருக்கிறார். இதனை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரே ரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோர் நேற்று கையெழுத்திட்டனர்.

தற்போதைய சபாநாயகர் அசோக ரன்வல கடந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பும் 11

## யாழ். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அர்ச்சுனா எம்.பியால் எழுந்த சலசலப்பு

பங்கேற்ற அரச அதிகாரிகள் கடும் விசனம்

அரச தரப்பினர் வேடிக்கை பார்த்தனர் என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராம நாதன் அர்ச்சுனாவின் செயற்பாடு குறித்து அதில் அரசு அதிகாரிகள் விசனம் தெரிவித்ததுடன் கட்டுப் படுத்தவேண்டியவர்கள் வேடிக்கை பார்த்தனர் என குற்றச்சாட்டுகளை முன்வைத்தமையை அவதானிக்க முடிந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற 11



### கட்சி ஆதரவாளர்களும் கூட்டத்தில் பிரசன்னம்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பலர் வருகை தந்தமையை 11

## செம்மலை, நாயாறுப் பகுதிகளில் இல்மனைட் அகழ்வதற்கு முயற்சி

மக்கள் திரண்டு தடுத்து நிறுத்தினர்

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு மாவட்டத்தில், செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் தனியார் நிறுவனம் இல்மனைட் அகழ்வதற்கு எடுத்த முயற்சி மக்களின் கடுமையான எதிர்ப்பினால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மக்களின் அனுமதியின்றி, அத்துமீறி கனிய மணல் அகழ்வு மேற்கொள்ள முடியாது எனவும், உடனடியாக அகழ்வு முயற்சிகளை கைவிட்டு அதிகாரிகளை அங்கி ருந்து வெளியேறுமாறும் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் பரவுவதை தடுக்க தீவிர நடவடிக்கை!

## யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 14

எலிக்காய்ச்சல் நோய் ஏற்ப டக்கூடிய ஆபத்தில் உள்ள விவசாயிகள், மீன்பிடித் தொழி லாளர்கள், துப்பரவுப் பணியா ளர்கள் போன்றவர்களுக்கு அந்நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக யாழ்ப்பா ணம் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில்-

யாழ்.மாவட்டத்தில் தற் போது பரவிவரும் ஒருவிதமான காய்ச்சல் காரணமாக இதுவரை 44 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இக்காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் யாழ் போதனா வைத்தியசாலயி லும் 32 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இக் காய்ச்சல் காரணமாக இதுவரை 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நோயாளர்களிடமிருந்து கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருவருக்கு எலிக் காய்ச்சல் இருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே தற்போது மேற்படி காய்ச்சலை எலிக்காய்ச்சலாக கருதி சிகிச்சைகளும் தடுப்பு நட வடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இக்காய்ச்சல் தற்போது பரவி வரும் பருத்தித்துறை, கர வெட்டி, சாவகச்சேரி சுகா தார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒருநாள் காய்ச்சலாக இருந்தா லும் உடன யாக அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடும்படி அறிவுறுத்தப்பட்டுள் ளது.

இப்பிரதேசத்திலுள்ள வைத் தியசாலைகளில் இந்நோய்க்கு சிகிச்சை வழங்குவதற்கான மருந் துகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரிக ளால் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின் றது. மேலும் பிரதேச செயலா ளர்களின் உதவியுடன் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மூலமாக பொதுமக்களுக்கு இவ்விடயம் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படு கின்றது.

எலிக்காய்ச்சல் நோய் ஏற் படக்கூடிய ஆபத்து இலக்கி னர்களான விவசாயிகள், மீன்பி டித் தொழிலாளர்கள், துப்புர வுப் பணியாளர்கள் போன்றவர் களுக்கு இந்நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் பிரதேசமட்ட உத்தியோகத்தர்க ளின் உதவியுடன் கிராமமட்டத் தில் விவசாயிகளுக்கு தடுப்பு மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நோய்ப்பரம்பலை ஆய்வு செய்து ஆலோசனை வழங்குவ தற்காக மத்திய சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்பு பிரிவிலிருந்து வைத்திய நிபுணர்கள் குழுவொன்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகைதந்துள்ளது.

அவர்கள் வைத்தியசாலைக ளிலும் சுகாதார வைத்திய அதி காரி பணிமனைகளிலும் களத்தி லும் ஆய்வுகளை மேற்கொண்டு உரிய ஆலோசனைகளை வழங்க வுள்ளனர்.

மேலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒரு தொகுதி மருந்துகள் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளது - இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது. (அ)

# வடமராட்சியில் தனிமையில் வசித்த வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடமராட்சி, அல்வாய் மேற்கு - ஆண்டாள் தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சுந்தையா கணபதிப்பிள்ளை (வயது 86) என்ற வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் நேற்று முன் தினம் காலையில் இருந்து கூக்குரல் இட்டவாறு இருந் துள்ளார்.

பின்னர் சத்தம் கேட்காது இருந்த நிலையில் அயலவர்க ளால் கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதக ருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அவர்கள் அங்கு சென்று பார்த்தபோது மேற்படி வயோ திபர் சடலமாகக் காணப்பட் டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு நேற்று முன் தினம் இரவு சென்ற பருத் தித்துறை பதில் மரண விசா ரணை அதிகாரி திருமதி அன் ரலா வின்சன்தயான் விசாரணை செய்து உடற்கூற்றுப் பரி சோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறைப் பொலிஸா ருக்கு உத்தரவிட்டார். (அ)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு ரஷ்ய அரசாங்கத்தின் உரம்!

கொழும்பு, டிசெ. 14

ரஷ்யா அரசாங்கத்தினால் இலங்கை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரத்தை கிளி நொச்சி விவசாயிகளுக்கு பகிர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா அரசாங்கத்தினால் இலங்கை விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்காக கையளிக் கப்பட்ட 55000 மெற்றிக்தொன் எம்.ஓ.பி. உரம் கிளிநொச்சி விவ சாயிகளுக்கும் வழங்குவதற்காக கொண்டுவரப்பட்டிருந்தது

குறித்த உரங்கள் பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை கமநல சேவை நிலையங்களுக்கு கொண்டு வரப்பட்டதுடன் குறித்த உரத்தை விரைவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாக கிளிநொச்சி மாவட்ட கம நல அபிவிருத்தி திணைக்களத் தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார். (அ)

# யாழ்.ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக இராமலிங்கம் சந்திரசேகர் பொறுப்பேற்பு



யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாவட்டத்தின் ஒருங் கிணைப்புக் குழுத் தலைவராக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தமது கடமையை பொறுப் பேற்றார்.

யாழ். மாவட்டத்தின் ஒருங் கிணைப்புக் குழுத் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ்ப்பாணம் மாவட்ட செயல கத்தில் நேற்று மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுத் தலைவராக உத்தியோகபூர்வமாக தமது கடமையினைப் பொறுப்பேற் றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன், யாழ். பதில் அர சாங்க அதிபர் மருதலிங்கம் பிர தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்!

கொழும்பு, டிசெ. 14

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு விற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பி னர்களுக்கான நியமனக் கடிதங் களை ஜனாதிபதியின் செயலா ளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வழங்கினார்.

இதன்படி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர நியமிக்கப்பட்டுள் ளார்.

டாமியன் அமல் கப்ரால், மொஹான் ரே அபேவர்தன, சஞ்சய குலதுங்க மற்றும் கலா நிதி ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்க ளாவர். (அ)

# மந்திகை வைத்தியசாலையில் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

எலிக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோயாளர்களின் நலன் கருதி பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகள் தொடங்கியுள்ளன.


யாழ்.மாவட்டத்தில் தற் போது அதிகரித்து வரும் எலிக் காய்ச்சல் தொற்று நோய் கார ணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின் றது.

நோயாளர்கள், விடுதிகளின் கட்டில்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் காணப்படுவ தால் தரையில் இருந்து சிகிச்சை பெறும் அவலநிலை ஏற்பட்டுள் ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மை யில் வெள்ள அனர்த்தம் ஏற் பட்டமையால் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல் தாக்கத் துடன் தற்போது புதிதாக எலிக் காய்ச்சல் என மூன்று வகை நோய்களின் தாக்கம் அதிகரித் துக் காணப்படுகின்றது.

அந்தவகையில் எலிக்காய்ச்ச லின் தாக்கத்தால் இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இதன் காரணமாக நேற்று முன் தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்த தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் வைத்தியர் எஸ். ஸ்ரீபவா னந்தராஜா வைத்தியசாலை யின் நிலைமைகளை நேரில்



ஆராய்ந்ததுடன் விடுதிகளில் தங்கி இருந்த நோயாளர்களை யும் பார்வையிட்டார்.

குறிப்பாக மருத்துவ சிகிச் சைப் பிரிவில் எலிக்காய்ச்சலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட வர்கள் மற்றும் ஏனைய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர் கள் எனப் பெரும் எண்ணிக்கை யான நோயாளர்கள் அங்கு மருத்துவ சிகிச்சை விடுதிகளில் கட்டில்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாகக் காணப்படுவதை யும், அவர்கள் தரையில் இருந்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள் வதனையும் காணக்கூடியதாக இருந்தது.

எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்திய பாராளு மன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்த ராஜா, உடனடியாக வைத்திய சாலையின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி புதிய மருத்துவ சிகிச்சைப் பிரிவு அலகு ஒன் றினை உடனடியாக உருவாக்கி அதனூடாக நோயாளர்களுக்குச் சிகிச்சையை ஆரம்பிப்பதற் கான நடவடிக்கையை மேற் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வை.திவாகரன், பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா வுக்கு எடுத்துரைக்கையில் - புதிய அலகொன்றை ஆரம் பிப்பதற்கு ஆளணிப் பற்றாக் குறை நிலவுகின்றது என்றும், அதனை நிவர்த்தி செய்து தரும் பட்சத்தில் புதிய அலகைத் திறக்க முடியும் என்றும் தெரி வித்தார்.

இதனைக் கவனத்தில் எடுத் துக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் உடனடியா கக் கலந்துரையாடலில் ஈடு பட்டு அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

குறிப்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் தாதியர்களின் பற்றாக் குறையை தற்காலிகமாக நிவர்த்தி செய்து தருவதாக அவர் உறுதியளித்ததன் பிர காரம் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கி யுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.12.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கலாநிதிப் பிரச்னை

நாடு வங்குரோத்து நிலையிருந்த காலத்தில் அநுர நாட்டை பெறுப்பெடுத்திருக்கின்றார். நாட்டை முன்கொண்டு செல்லும் போது அவருக்கு பல சவால்கள் காத்திருக்கின்றன. அவர் பல சவால்களை எதிர்கொள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவருக்கு இப்போது வந்திருக்கும் சோதனையோ முற்றிலும் வித்தியாசமானது. சபாநாயகர் கலாநிதிப் பட்டம் பெற்றவரா - எந்தப் பல்கலைக் கழகத்தில் பெற்றவர் என்னும் கேள்வியை முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எழுப்பியிருந்தார். இதனைத் தொடர்ந்து கலாநிதி சர்ச்சை எழுந்தது. இறுதியில் சபாநாயகர் கற்றதாகக் குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகம் அதனை மறுத்துவிட்டது. எதை வைத்து அநுரவுடன் முட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு மெல்லுவதற்கு அவல் கிடைத்த கதையாகிவிட்டது.

இதனைத் தொடர்ந்து தற்போது நிதியமைச்சர் பெயருக்கு முன்னாலுள்ள கலாநிதிப் பட்டமும் அகற்றப்பட்டுள்ளது. இலங்கையின் கலாநிதிகளுக்கு இது சோதனைக் காலம்தான் ஏனெனில் தங்களை கலாநிதிகள் என்று குறிப்பிட்டுவரும் பலர் உண்மையிலேயே கலாநிதிகள்தானா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. ஆனால், இங்குள்ள பிரச்னை கலாநிதி பற்றி ஏராளம் குழப்பங்கள் உண்டு.

நமது தமிழ்ச் சூழலில் சாதாரண வைத்தியரைக் கூட வைத்திய கலாநிதி என்று குறிப்பிடும் அறியாமை பலரிடம் உண்டு. தங்களை படித்தவர்கள் என்று எண்ணிக் கொள்பவர்கள் கூட வைத்தியர்கள் தொடர்பில் அழைப்பிதழ்களில் எழுதுகின்ற போது, இந்தத் தவறை தொடர்ந்தும் செய்கின்றனர். அவ்வாறு எழுதுகின்ற போது, வைத்தியர்களும் அவ்வாறு குறிப்பிடவேண்டாம் - அது தவறு என்று கூறுவதில்லை - ஒரு வேளை அவர்களும் தங்களை அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் போலும்.

கலாநிதிப் பட்டத்தை படித்து பெறுபவர்களும் இருக்கின்றனர் - படிக்காமல் கௌரவ அடிப்படையில் பெறுபவர்களும் இருக்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலாநிதிப் பட்டத்தை பெற்ற ஒருவர்தான் - ஒரு ரஷ்ய பல்கலைக்கழகம் அதனை வழங்கியிருக்கின்றது. ஆனால், அவர் தன்னை எங்கும் அவ்வாறு அழைக்க முற்பட்டதில்லை - மற்றவர்களும் அவரை அவ்வாறு அழைத்ததுமில்லை. ஆனால், அவ்வாறு அவர் தன்னை அழைத்துக் கொண்டால் அது தவறும் அல்ல - ஏனெனில் கௌரவ கலாநிதிப் பட்டமும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றுதான். ஒருவரது ஆளுமைக்காக, ஒருவர் நீண்டகாலம் குறிப்பிட்ட துறையில் வழங்கிவந்த பங்களிப்புக்காக பல்கலைக்கழகங்கள் ஒருவரை கௌரவிப்பதுண்டு. அது ஒரு உலக நடைமுறை. ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு வால் பிடிப்பதற்காக கலாநிதிகளை வழங்கும் பல்கலைக்கழங்களும் உண்டு.

அதேபோன்று, ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்தால் கலாநிதிகளை வழங்கும் மூன்றாம்தர அமைப்புக்களும் உண்டு. அப்படியான அமைப்பு ஒன்று, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவிப் பிள்ளையை திருமணம் செய்ய விருப்பம் என்று கூறிய மேர்வின் சில்வாவுக்கும் கலாநிதி பட்டம் வழங்கியிருக்கின்றது. மேர்வின் சில்வாவை நாடாளுமன்றத்தில் 'டொக்டர்' என்று அழைத்தமை, ஹன்சாட்டிலும் வந்திருக்கின்றது. கல்லாதவர்கள் கலாநிதியாகுமளவுக்கு கலாநிதிப் பட்டங்கள் வழங்கும் மூன்றாம்தர அமைப்புகள் இப்போது ஏராளம். ஒரு வேளை சபாநாயகரும் அப்படியொரு கலாநிதியை வைத்துக் கொண்டுதான் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றார் போலும். இப்போது பிரச்னை யார் உண்மையிலேயே கலாநிதிக்காக படித்து, அதனை பெற்றுக் கொண்டார் என்பதுதான். சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் மேர்வின் சில்வாவும் கலாநிதிதான், அரசியலமைப்பு நிபுணர் ஜயம்பதி விக்கிரமரட்ணவும் கலாநிதிதான்.

# எலிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு மருந்து வடமராட்சி மக்களுக்கு வழங்கப்பட்டது

*யாழ்ப்பாணம், டிசெ. 14*

பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு எலிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு மருந்து நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது

திக்கம், இன்பர்சிட்டி, வல்லிபுரம் ஆகிய இடங்களிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் வைத்தும், மேலைப்புலோலி சதாவதானி சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்தும் இந்தத் தடுப்பு மருந்துகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் வழங்கப்பட்டன. (எ-02)

# வவுனியாவில் மிகசிறப்பான முறையில் மத்தியஸ்த தினம் நேற்று நடைபெற்றது




*வவுனியா, டிசெ. 14*

வவுனியாவில் மத்தியஸ்த தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ. விமல்ராஜ் தலைமையில் நேற்றுக்காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

தேசிய மத்தியஸ்த தினமானது ஒவ்வொரு வருடமும் ஜூலை 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் மாவட்ட மட்டங்களில் இந்த நிகழ்வு கடந்த காலங்களில் நடைபெறவில்லை.

இந்த நிலையில், மத்தியஸ்த சபைகளின் செயல்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இந்த நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்துக்கான இந்த நிகழ்வின்போது, மத்தியஸ்த சபையின் செயல்பாடுகள், அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றி செயல்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும், அனுபவப் பகிர்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ. ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந. கமலதாசன், உதவி மாவட்ட செயலாளர் எம். சபர்ஜா, விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# தேன் என்று சீனிப்பாணி விற்பனை வவுனியாவில் மூன்று பேர் சிக்கினர்

*வவுனியா, டிசெ. 14*

சீனிப்பாணியை தயாரித்து தேன் என்று மோசடி செய்து விற்பனை செய்துவந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து பெருமளவான சீனிப்பாணியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பொதுச் சுகாதார பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் மேஜயாவின் வழிகாட்டலில், நெளுக்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் சிவரஞ்சன் தலைமையில், ஓமந்தை பொதுச் சுகாதார பரிசோதகர் விதுசன், கந்தபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் ஞானபிரகாஸ், பூவரசங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் கிசோகாந் ஆகியோர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து ஊர்மிலாக்கோட்டம் பகுதியிலுள்ள வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 200 போத்தல் சீனிப்பாணி சுகாதாரப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சீனிப்பாணியை தயாரித்து அதற்குள் சிறிதளவு தேனை மாத்திரம் கலந்து ஏ- 9 வீதியின் முறிகண்டிப்பகுதியிலும், நெடுங்கேணி பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன், இங்கிருந்து அநுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளுக்கும் அவை கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இது உடல் நலத்துக்கு தீங்குவிளைவிக்கின்றது. எனவே, பொதுமக்கள் தேனை கொள்வனவு செய்யும் போது சரியான முறையில் உறுதிப்படுத்தி அவற்றை கொள்வனவு செய்யுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

(எ- 10)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 14 சனிக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 29
நல்ல நேரம் :7.31 - 9.00
ராகு காலம் :9.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**இடபம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். உடல்அசதி சோர்வு வந்து விலகும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்டநாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
விஜபிகள் அறிமுகமாவார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அரசால் அனுகூலம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புதுவாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். ஆடை ஆபரணம் சேரும்.

# முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் மாறவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மாத நிகழ்வும், வாசிப்பு மாத நிகழ்வும் பண்பாட்டுப் பெருவிழாவும் பருத்தித்துறை எஸ். எஸ். மண்டபத்தில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களுக்கு என்று தனிச் சிறப்பான பண்பாடுகள் இருக்கின்றன. அவை இன்று அருகி வருகின்றன. அவற்றை கட்டிக் காப்பதற்காகவே இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவை வரவேற்கப்படவேண்டும். ஊக்குவிக்கப் பட வேண்டும். இதன் ஊடாக எமது பண்பாடுகள் காக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும். குறிப்பாக வரவேற்பு, விருந்தோம்பல், நன்றி கூறல் என்பன எமது பண்பாட்டின் அடிப்படைகள். அவற்றை விட்டு நாம் இன்று வெகுதூரம் சென்றுவிட்டோமா என்ற அச்சம் ஏற்படுகின்றது.

அரச திணைக்களங்களை நாடி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்கள் சென்றால், சில திணைக்களங்களில் அவர்களை வரவேற்பதற்கு யாருமில்லை. அது தவறானது. பொதுமக்களை நாடிச் சென்று நாம் சேவை செய்ய வேண்டும். விரைவான, தரமான, அன்பான சேவையே மக்கள் சேவை. அதைச் செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களங்களும் முன்வரவேண்டும்.

எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும். நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சிலர் வந்தார்கள். ஆனால், அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களிடம் கேட்டபோது, முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் கையூட்டு எதிர்பார்க்கின்றார்கள் என்று சொன்னார்கள். அது அன்றைய நிலைமை. ஆனால், தற்போதைய அரசாங்கம் அவற்றுக்கு முற்றிலும் எதிரானது. பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்க வேண்டும். எமது உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும். அவர்களை அலைக்கழிக்கக் கூடாது. எமது மாகாணத்தை நாம் அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயல்பட வேண்டும்"-என்றார்.

இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், வாசிப்புமாத போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் அ. வினோராஜ், வடக்கு மாகாண ஆளுநருக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். மேலும், பருத்தித்துறை பிரதேச சபையின் நிகழ்நிலை மூலமான கட்டணங்களைச் செலுத்தும் திட்டமும் ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(எ-02)

# யுசிமாஸ் மனக்கணித போட்டியில் யாழ். மாணவர்கள் 30 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவுள்ள உலகளாவிய யுசிமாஸ் மனக் கணித போட்டியில் 30 நாடுகளில் இருந்து போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் இலங்கையிலிருந்து 103 மாணவர்கள் பங்கு பற்றவுள்ளனர். அந்தவகையில் யாழ். திருநெல்வேலி யுசிமாஸ் நிலையத்தில் கற்கும் 30 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இலங்கையிலிருந்து நான்கு மாணவர்கள் யுசிமாஸ் உலகக் கிண்ண மனக்கணிதப் போட் டியில் பங்குபற்ற தெரிவாகி யுள்ள நிலையில்



அதில் திரு நெல்வேலி நிலையத்தைச் சேர்ந்த 2 மாணவர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

(எ-05)

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் மாணவனுக்கு வெண்கலப்பதக்கம்



வவுனியா, டிசெ. 14

சர்வதேச ரீதியில் நடைபெற்ற விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் பா. கசிபன், மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

கடந்த வாரம் ருமேனியாவில் நடைபெற்ற இந்த போட்டிக்கு இலங்கையில் இருந்து யாழ்ப்பா ணம், வவுனியா, கண்டி, களுத்துறை, கொழும்பு போன்ற மாவட்டங்களிலி ருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

50 நாடுகளில் இருந்து சுமார் 310 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய ஒலிம்பியாட் போட்டியில் தனது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தியதன் மூலம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் வெற்றி பெற்று பாடசாலைக்கும் வவுனியா மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.குறித்த மாணவன் இப் போட்டிக்கு சென்றுவருவதில் பொருளாதாரம் பெரும் சவாலாக இருந்தது. இந்த நிலையில் பாடசாலையின் அதிபர் ஆ. லோ கேஸ்வரன் மற்றும் பெற்றோர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்துக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இலண்டன் கிளைச் சங்கத்தின் அனுசரணையில் மாணவன் போட்டிக்கு ருமேனியா சென்று வருவதற்காக 7 இலட்சத்து 30,000 ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் யார் தவறு செய்தாலும் நாம் நடவடிக்கை எடுப்போம்!

## ஜனாதிபதி அநுரகுமார திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 14

**எமது அரசாங்கத்தின் எந்த பொறுப்பை வகிப்பவர் தவறு செய்திருந்தாலும் நாம் நடவடிக்கை எடுப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.**

அரச ஊடக பிரதானிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி அநுரகுமார இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமாக இந்நாட்டு மக்கள் பல்வேறு அரசாங்கங்களை தெரிவு செய்தனர். பல அரசாங்கங்களை கவிழ்த்துள்ளனர்.

வரலாற்றில் முதல் முறையாக இம்முறை நாட்டு மக்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய வரலாற்று மக்கள் ஆணையின் அர்த்தம் மற்றும் நோக்கம் என்னவென்பது தொடர்பிலான ஆழமான சிந்தனை எமக்கு உள்ளது.

அத்துடன் தரமான மற்றும் நிலையான நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை தேர்ந்தெடுத்தனர். அந்த சிறப்பான நம்பிக்கை கடுகளவிலும் சிதைந்து போவதற்கு எமது அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.நாட்டுக்குள் தவறு செய்கின்ற எவரையும், எந்த காரணத்துக்காகவும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை. நாட்டுக்குள் மட்டுமன்றி எமது அரசாங்கத்தினுள் எந்த தரத்தில் இருப்பவராயினும் தவறு செய்தால் அதற்கு எதிரான நடவடிக்கையை எடுப்பதற்கு நாம் தயங்கப்போவதில்லை. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய சரியான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்வதற்கும் நாம் இரு முறை சிந்திக்கப் போவதில்லை.

ஏழு தசாப்தங்களாக ஏமாற்றங்களுக்கு உள்ளான மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாக்கவும், இந்த நாட்டை மிகச் சிறந்த நாடாக மாற்றுவதற்கும் நான் நிபந்தனைகளின்றி அர்ப்பணிப்பேன்-என்றார். (அ)

# இலங்கை இராஜதந்திரிக்கு ஆஸ்திரேலியாவில் அபராதம்!

கொழும்பு, டிசெ. 14

இலங்கை இராஜதந்திர அதிகாரியான திருமதி ஹிமாலி அருணதிலகவுக்கு ஆஸ்திரேலியாவின் பெடரல் நீதிமன்றத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிதூதுவர் திருமதி ஹிமாலி அருணதிலக தனது வீட்டுப் பணிப்பெண் பிரியங்கா தனரத்னவை துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்காக பெடரல் நீதிமன்றத்தால் அவருக்கு 117,028.80 அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த குறித்த ஊழியர் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கன்பரா வீட்டில் பணியாற்றியதாக வெளிநாட்டு ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

திருமதி ஹிமாலி அருணதிலக தனது பணியாளருக்கு உரிய முறையில் சம்பளம் வழங்கவில்லை எனவும், அதற்கான அபராதத் தொகையை 60 நாட்களுக்குள் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், பிரியங்க தனரத்னவுக்கு 374,151.90 டொலர் இழப்பீடு வழங்குமாறு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

ஹிமாலி அருணதிலக தற்போது ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக உள்ளார். (அ)

# இலங்கை-இந்தியா இடையே கடற்படையின் கூட்டு பயிற்சி

கொழும்பு, டிசெ. 14

இலங்கை-இந்திய கூட்டு கடற்படை பயிற்சி, இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.

இலங்கை-இந்திய கடற்படை பயிற்சி இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் 2024 டிசெம்பர் 17 முதல் 20 வரை நடைபெற உள்ளது.

இந்த இருதரப்பு பயிற்சியில் பங்கேற்பதற்காக எஸ்எல்என்எஸ் சயுரா கடற்படை கப்பல் நேற்று அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் இருந்து இந்தியா புறப்பட்டது.

இந்த வருடாந்த பயிற்சியானது, இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளுக்கு இடையேயான கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், பரஸ்பர புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்குமான செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தநிலையில் கடற்படை மரபுகளுக்கமைய தெற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சந்திம சில்வா துறைமுகத்திற்கு விஜயம் செய்து எஸ்எல்என்எஸ் சயுரா கப்பலை வழியனுப்பி வைத்தார். (அ)

# வெளிநாட்டில் தொழில் புரிவோரின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்

கொழும்பு, டிசெ. 14

2024ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வெளிநாடுகளில் தொழில் புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் திகதி நவம்பர் மாதம் ஆரம்பித்துள்ளதுடன் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இந்த புலமைப்பரிசில் வழக்குவது தொடர்பில் பாடசாலை மட்டத்தில் புலம்பெயர் இலங்கையர்களின் பிள்ளைகளை அறிவுறுத்த பாடசாலை அதிபர்கள் இதுதொடர்பில் கவனம் செலுத்துமாறும் பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

குறித்த புலமைப்பரிசில் வழங்கிவைக்கப்படுவது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துவிட்டு தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கை பெற்றோர்களின் பிள்ளைகளுக்காகும். குறித்த புலமைப்பரிசில் மூன்று குழுக்களாக வழங்கிவைக்கப்படுகிறது.

அதன் பிரகாரம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 25ஆயிரம் ரூபாவும் கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 30ஆயிரம் ரூபாவும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ள அல்லது வேறு பாடநெறிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு தகுதி பெற்றுள்ள பிள்ளைகளுக்கு 40ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் இணையவழி ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், இதுதொடர்பான மேலதிக தகவல்களை 0112365471 என்ற தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வருட முற்பகுதியில் நிலவிய வெப்பமே தேங்காய் தட்டுப்பாட்டுக்குக் காரணம்!

கொழும்பு, டிசெ. 14

நாட்டின் அண்மைக்காலமாக நிலவிவரும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு வருடத்தின் முதல் சில மாதங்களில் நிலவிய கடுமையான வெப்பமான வானிலையே பிரதான காரணம் என ருஹுணு பல்கலைக்கழகத்தின் பயிர் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அருணகுமார தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் வருடாந்தம் பயிரிடப்படும் தென்னை மரக்கன்றுகளின் எண்ணிக்கை சுமார் 70 இலட்சம் வரை குறைந்துள்ளமையும் இதற்கான காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குறுகிய காலத்திற்குள் தேங்காய் தட்டுப்பாடு ஏற்படுவதென்றால் குரங்குகளின் எண்ணிக்கையில் உடனடி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படியொரு உடனடி அதிகரிப்பு இல்லை என்பது தெளிவாகிறது. மேலும் மார்ச் முதல் ஜூன் வரை, நாட்டில் அதிக வெப்பநிலை உயர்வு மற்றும் தேங்காய் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தென்னை மரத்துக்கு உகந்த வெப்பநிலை 27-28 சென்ரிகிரேட் வெப்பநிலையாகும். ஆனால் 33 சென்ரிகிரேட்டுக்கு மேல் செல்லும் போது, தென்னை மரங்களின் மகரந்தச் சேர்க்கை குறைந்து, காய்க்கும் தன்மை குறைகிறது-என்றார்.

இதேவேளை உலகிலேயே அதிக தேங்காய் பாவனையைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்வதாகவும், ஒருவர் வருடத்திற்கு 114 தேங்காய்களை உட்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொலை!

கொழும்பு, டிசெ. 14

குளியாப்பிட்டிய - தும்மலசூரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சியம்பலகஸ்ருப்ப பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் மேற்கு சியம்பலகஸ்ருப்ப, தும்மலசூரிய பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார். கூரிய ஆயுதத்தால் கழுத்தை வெட்டி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. கொலைக்கான காரணம் வெளியாகவில்லை .சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித் தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் குளியாப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தும்மலசூரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குரங்குகளுக்கு கருத்தடை திட்டம் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 14

குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் முன்னோடி திட்டம் நேற்று முன் தினம் மாத்தளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பிடிபடும் குரங்குகள் கிரிதலே கால்நடை பராமரிப்பு மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு மீண்டும் அதே பகுதிகளில் விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 4.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நாட்டில் 25-30 இலட்சம் குரங்குகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாக சுற்றாடல் பிரதி அமைச்சர் புவியியலாளர் அன்ரன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# கண்டியில் மூன்றரை இலட்சம் ரூபாவை கையூட்டாக பெற்ற பெண் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 14

கண்டி - தலாத்துஓயா பிரதேசத்தில் மூன்றரை இலட்சம் ரூபாவை கையூட்டாக பெற்றதாகக் கூறப்படும் பெண் ஒருவரை ஊழலுக்கு எதிரான விசாரணை ஆணைக்குழு கைது செய்துள்ளது.கடவத்தை - கோனஹேன பகுதியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின்பிரகாரம், கண்டி போகம்பர விளையாட்டரங் கிற்கு முன்பாக உள்ள வாகன தரிப்பிடத் தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.விவசாய நடவடிக்கைகளுக் கான காணிகளை காணி மறு சீரமைப்பு ஆணைக்குழு ஊடாக பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துத ருவதாக கூறி, குறித்த பெண் இடைத்தரக ராகச் செயற் பட்டு கையூட்டாக பணத்தைப் பெற் றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோட்டாபய- 2' ஆக மாறிவிட்டாரா அநுர?

## ஹர்ஷன ராஜகருணா கேள்வி

**கொழும்பு, டிசெ. 14**

**கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மைப் பட்டதாரி அமைச்சர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் உள்ளனர். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க "கோட்டாபய பகுதி - 2"ஆக மாறிவிட்டாரா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா கேள்வியெழுப்பினார்.**

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-உண்மையில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கலாநிதி என்று தன்னைத் தானே கூறிக்கொண்டு சபாநாயகர் மக்களை ஏமாற்றியிருக்கின்றாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த அவமரியாதையை போக்கிக் கொள்வதற்கு இனியும் தாமதிக்காமல் உண்மையை வெளிப்படுத்துமாறு சபாநாயகரை வலியுறுத்துகிறோம். சபாநாயகருக்கு ஏற்படும் அவமானம் பாராளுமன்றத்துக்கு ஏற்படும் அவமானமாகும்.

சபாநாயகர் மீது மாத்திரமின்றி மேலும் சில அமைச்சர்களது பட்டங்கள் தொடர்பிலும் தற்போது தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மை பட்டதாரி அமைச்சர்களாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் உள்ளனர். மக்களின் பாரிய ஆணையைப் பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் நாட்டுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு ஜே.வி.பி.க்கு உண்டு.

அதேபோன்று சபாநாயகர் பொய் கூறுகிறார் என்றால் உடனடியாக அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகிறோம். அன்று கோட்டாபய ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது, எதிர்க்கட்சி எம்.பி.யாக அநுரகுமார திஸாநாயக்க கடும் கண்டனங்களை முன்வைத்தார். ஆனால் இன்று அவரது ஆட்சியில் அதே பிரச்சினை ஏற்பட்டுள்ளபோது அவரால் தீர்வினை வழங்க முடியாமலிருக்கிறது. அநுர இப்போது "கோட்டாபய -2" ஆகிறாரா?

அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியிருந்தார். ஆனால் இன்னும் அந்த பிரச்னைக்கு தீர்வு கிடைக்கவில்லை. கோட்டாபயவின் அதே நாடகத்தை அல்லவா இவரும் அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றார்? மக்கள் மீண்டும் ஏ மாற்றமடைந்துள்ளனரா? தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்- என்றார். (அ)

# பெல்ஜியம் தீ விபத்தில் தமிழ் இளைஞன் பலி!

**கொழும்பு, டிசெ. 14**

பெல்ஜியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 23 வயதான தமிழ் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளத்தை சேர்ந்த லோசன் ஸ்ரீமுருகன் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஆண்ட்வெர்ப் பகுதியில் கடந்த 5ஆம் திகதி லோசன் மேலும் மூவருடன் வசித்து வந்த கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மற்றவர்கள் சிறிய காயங்களுடன் தப்பிக்க முடிந்தது. லோசன் கடுமையான புகையை சுவாசித்ததால் குளியலறையில் மயக்கமடைந் தார். அவர் கோமா நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நான்கு நாட்களுக்குப் பிறகு கடந்த 9ஆம் திகதி அவர் மூளைச்சாவு அடைந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர் காலமானார். 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம் திகதி இலங்கையின் புத்தளத்தில் பிறந்த லோசன், 2022 ஆம் ஆண்டு முதல் பெல்ஜியத்தில் வசித்து வந்தார். அவர் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோது, அவரது 23 வயதில் அவரது வாழ்க்கை சோகமாக முடிவுக்கு வந்தது.

லோசனின் குடும்பத்திற்கு ஆதரவாகவும் இறுதிச் சடங்குகளுக்கான செலவை ஈடு செய்யவும் அவரது நண்பர்கள் சிலரால் நிதி சேகரிப்பு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நிதியானது இந்து சமய சடங்குகள், போக்குவரத்து செலவுகள் மற்றும் இலங்கையில் துக்கத்தில் இருக்கும் அவரது குடும்பத்திற்கு நிதியுதவி உள்ளிட்ட இறுதிச் சடங்குகளுக்கு பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோழி இறைச்சி விலை அதிகரிப்பு!

**கொழும்பு, டிசெ. 14**

பண்டிகைக் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் காலம் என்பதால் அதிக இலாபம் பெறும் நோக்கில் வியாபாரிகள் சிலர் கோழி இறைச்சியின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின்விலை 1,500 ரூபாவை அண்மித்துள் ளதாக அசேல சம்பத் மேலும் கூறினார். (அ)

# பசறையில் கிடைத்த நீல நிற மாணிக்கம்!

**கொழும்பு, டிசெ. 14**

நீர்கொழும்பில் வர்த்தகர் ஒருவர் பிரமிட் வடிவில் வெட்டப்படாத அரிய வகை நீலநிற மாணிக்கக்கல் ஒன்றை கண்டு பிடித்துள்ளார். எனினும் இதன் பெறுமதி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

17.42 கரட் நிறை கொண்ட குறித்த மாணிக்கக்கல் பதுளை, பசறை பகுதியில் உள்ள சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாணிக்கக்கல் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைக் கொண்டுள்ளது. உலக சந்தையுடன் இணைவதற்கும் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கும் இலங்கைக்கு இந்த மாணிக்கக்கல் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இதன் உரிமையாளர் சுமார் 20 வருடங்களாக மாணிக்கக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வர்த்தகர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சுங்க வரியை 15 ரூபா குறைத்தால் 220 ரூபாவுக்கு அரிசியை விற்கலாம்

## இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 14**

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான சுங்க வரியை 15 ரூபாவினால் குறைத்தால் சில்லறை விலையை நியாயமான முறையில் தீர்மானிக்க முடியும். இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ நாட்டு அரிசியை குறைந்தது 220 ரூபாவுக்கு வழங்க முடியும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரிசி இறக்குமதிக்கான வரையறைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ள நிலையில், வரிகள் ஏதும் குறைக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்படும் அரிசி மொத்த விற்பனை சந்தைக்கு வரும்போது, கிலோவுக்கு 8 முதல் 10 வீதம் வரை செலவழிக்க நேரிடும்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் 440 மெற்றிக் தொன் அரிசியை தனியார் இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அரிசிக்கான சுங்க வரியை 15 வீதத்தால் குறைத்தால் சில்லறை விலையை நியாயமான முறையில் தீர்மானிக்க முடியும். வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

இறக்குமதி செய்யப்படும் அரிசியை துறைமுகத்தில் இருந்து விரைவாக விடுவிப்பதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளோம்-என்றார்.

# பாராளுமன்றத் தேர்தல் செலவீன விவரத்திரட்டை பார்வையிடலாம்!

**கொழும்பு, டிசெ. 14**

பாராளுமன்ற தேர்தல் செலவீனம் தொடர்பான விபரத்திரட்டை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் பொதுமக்கள் பார்வையிட முடியுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், 22 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், போட்டியிட்ட கட்சியின் செயலாளர்களின் விவரங்களை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை பொதுமக்கள் பார்வையிடலாம் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த விவரத்திரட்டுக்கள் பற்றிய முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, அம்பாந்தோட்டை, வன்னி, திருகோணமலை, அநுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனராகலை ஆகிய தேர்தல் மாவட்டங்களின் மாவட்ட செயலகத்திலும், மாத்தளை, நுவரெலியா, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திகாமடுல்ல, குருணாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களின் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வையிட முடியுமெனவும் தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

**கொழும்பு, டிசெ. 14**

கொழும்பு - பதுளை பிரதான வீதியின் பம்பஹின் சந்தியில் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களினால் கையில் தீப்பந்தம் ஏந்தி நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில் கல்வி தொடர்பான விடயங்களில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள், அத்தியாவசிய வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக பதுளை - கொழும்பு பிரதான வீதியின் பம்பஹின் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் மீதான பிரேரணை எங்களுக்கு சவாலாக அமையாது

## கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, டிசெ. 14

**பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணை வந்தால்கூட அது சவாலாக அமையாது என்று ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என எதிர ணிகளால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப் பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதி அமைச்சர் நாமல் கரு ணாரத்ன கூறியவை வருமாறு-

சபாநாயகரால் உரிய விளக் கமளிக்கப்படவுள்ளது. அவர் விரைவில் அந்த அறிவிப்பை விடுப்பார். அந்த அறிவிப்பு வெளியான பின்னரே அடுத் தக்கட்டம் பற்றி கூறமுடியும்.

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு 159 உறுப்பி னர்கள் உள்ளனர். எனவே, நம் பிக்கையில்லாப் பிரேரணை எதற்கு? அவ்வாறு வந்தால் என்ன நடக்கும் என்பது பற்றி எதிரணிகள் சிந்தித்தால் நல் லது-என்றார்.

அதேவேளை, 'எதிரணிகள் நம்பிக்கையில்லாப் பிரேர ணையைக் கொண்டுவரட்டும். கதைப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதால்தான் மரண சான் றிதழ், பிறப்பு சான்றிதழ் என சான்றிதழ்களை தேடி அலைக் கின்றனர் எதிரணியினர்.'- என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (அ)

# அரச கட்டமைப்பின் ஊடாக 2025 இல் நெல் கொள்வனவு!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, டிசெ. 14

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய உற்பத்தியை மேம்ப டுத்த விவசாயத்துறைக்கு அதிக ளவில் நிதி ஒதுக்கப்படும். அடுத்த ஆண்டு முதல் அரச கட் டமைப்பின் ஊடாக நெல்லை கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என பெருந்தோட்டத் துறை அபிவிருத்தி மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச் சர் சமந்த வித்யாரத்ன தெரிவித் தார்.

காலி பகுதியில் நடை பெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-சந்தையில் நிலவும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப் பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. அடுத்த ஆண்டு முதல் அரச கட்டமைப்பின் ஊடாக விவசாயிகளிடமிருந்து நெல் அதிகளவில் கொள்வனவு செய்யப்பட்டு அரச அரிசி உற்பத்தி ஆலைகளில் களஞ்சி யப்படுத்த தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியா ளர்களுக்கு தேவையான வச திகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படும். பிரதான அரிசி உற்பத்தி யாளர்களிடம் அடிபணிய வேண்டிய தேவை. பெரும் போக விவசாயத்துக்கு தேவை யான அனைத்து ஒத்துழைப் புக்களையும் பெற்றுக் கொடுப் போம்.

அரசுக்கு சொந்தமான சிலாபம் மற்றும் குருநாகல் தெங்கு தோட்டங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக உரம் விநியோகிக்கப்பட வில்லை. முறையான பராம ரிப்புக்கள் இல்லாமல் எவ்வாறு அதிக விளைச்சலை எதிர் பார்க்க முடியும். கடந்த அர சாங்கத்தின் தவறான நிர்வாகத் தினால் தேசிய உற்பத்திகள் பாதிக்கப்பட்டன.

அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 55 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள் ளது. அவற்றில் 27.50 மெற்றிக் தொன் உரத்தை தெங்கு பயிர்ச் செய்கைக்கு வழங்குமாறு ஜனா திபதி ஆலோசனை வழங்கியுள் ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய உற்பத்தியை மேம்ப டுத்த விவசாயத்துறைக்கு அதி களவில் நிதி ஒதுக்கப்படும்- என்றார். (அ)

# 17 ஆம், 18ஆம் திகதிகளில் பாராளுமன்றம் கூடுகிறது

கொழும்பு, டிசெ. 14

பாராளுமன்றம் டிசெம்பர் 17 ஆம், 18ஆம் திகதிகளில் கூட வுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர வினால் சபாநாயகர் தலைமை யில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற் றிய கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தவகையில், டிசம்பர் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூட விருப்பதுடன், காலை 9.30 மணி முதல் மாலை 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக் கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 மணி முதல் மாலை 2.00 மணிவரை பாட சாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடு களை மேற்கொள்வது தொடர் பான குறைநிரப்பு தொகை மதிப்பீடு மற்றும் 2024 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் குறைநிரப்புத் தொகை மதிப்பீடு தொடர்பான விவாதத்தை நடத்த திட்டமிடப்பட் டுள்ளது.

அத்துடன் மாலை 2.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை சர்வதேச இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை (எதிர்க்கட்சி) தொடர்பான விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 18ஆம் திகதி புதன்கிழமை, காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூட விருப்பதுடன், அன்று காலை 9.30 மணி முதல் மாலை 10.30 மணிவரை வாய்மூல விடைக் கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற் றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளி நாட்டுச் செலாவணிச் சட்டத் தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப் பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்திற்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத் தின் போதான இரண்டு கேள் விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட் டுள்ளது. (அ)

# கைவிடப்பட்ட நிலையில் மற்றுமொரு சொகுசு கார்!

கொழும்பு, டிசெ. 14

அம்பாந்தோட்டை, தங் காலை, வீரகெட்டிய பிரதே சத்தில் உள்ள காணி ஒன்றிற்கு அருகில் கைவிடப்பட்ட நிலை யில் சொகுசு கார் ஒன்று கைப் பற்றப்பட்டுள்ளதாக வீரகெட் டிய பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகெட்டிய பொலிஸ ாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சொகுசு கார் கைப்பற்றப்பட் டுள்ளது.

இந்த சொகுசு கார் கட வத்தை, விஜயபா மாவத்தை பகுதியில் வசிக்கும் 36 வயது டைய பெண் ஒருவரின் பெய ரில் பதிவு செய்யப்பட்டுள் ளதாக பொலிஸ் விசார ணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரயில் ஊடாக சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு புதிய திட்டங்கள்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, டிசெ. 14

ரயில் ஊடாக சரக்கு போக் குவரத்தை மேம்படுத்தும் வகை யில் புதிய திட்டங்கள் ஆரம் பிக்கப்படும் என போக்குவ ரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ரயில்வே தலைமையகத்தில் ரயில்வே திணைக்கள அதிகா ரிகள் மற்றும் தொழிற்சங்க பிர திநிதிகளுக்கு இடையில் நடை பெற்ற கலந்துரையாடலை டுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

ரயில்வே திணைக்களத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்கு றைக்கு உரிய தீர்வுகளை வழங் குவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரயில் தாமதம் மற்றும் ரயில் கோளாறுகளை தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும் ரயில் சேவையை அபிவிருத்தி செய்வ தற்கு வரவு-செலவு திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொழும்பு துறைமுகத்தில் விசேட கண் காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். (அ)

# இலங்கைக்கு அனுப்ப கோரிய இளைஞனை நாட்டுக்கு அழைத்து வர நாமல் வலியுறுத்து!



கொழும்பு, டிசெ. 14

தம்மை மீண்டும் இலங் கைக்கு அனுப்புமாறு கோரி தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவல கத்துக்கு முன்பாக ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட இலங்கை யரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தி யுள்ளார்.

தம்மை மீண்டும் இலங் கைக்கு அனுப்புமாறு கோரி, இலங்கையைச் சேர்ந்த ஒருவர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு முன்பாக மண்டியிட்டு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட காணொளி ஒன்றைத் தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது தமிழகத்தில் தஞ்சமடைந்த ஒருவரே இவ்வாறு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு இந்தியக் குடியு ரிமை வழங்க வேண்டும் அல் லது தம்மை மீண்டும் இலங் கைக்குத் திருப்பி அனுப்புவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் குறித்த நபர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், குறித்த காணொளியை தமது எக்ஸ் பக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங் கத்துடன் இணைந்து உடன டியாக குறித்த நபரை இலங் கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் போரின் விளை வாக எந்தவொரு இளைஞ ரினதும் எதிர்காலம் மறுக் கப்படக்கூடாது எனவும் அவர் தமது பதிவில் குறிப்பிட் டுள்ளார்.

குறித்த நபரை இலங்கைக்கு அழைத்துவருவதற்குத் தேவை யான உதவிகளை வழங்குவ தற்குத் தாம் தயாராகவுள்ள தாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் பயிற்சி கல்லூரியில் புதிதாக புத்தர் சிலை வைப்பு

## பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாக அமைந்து விடக்கூடாது - முன்னாள் எம்.பி. கருணாகரம்

மட்டக்களப்பு, டிசெ.14

**மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் புதிதாக வைக்கப்பட்ட புத்தர் சிலை, வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாக இருக்கக்கூடாது என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில்,"மட்டக் களப்பு போதனா மருத்துவமனையின் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்னால் புத்தர் சிலையொன்று திடீரென்று முளைத்துள்ளது. தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர், பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர். அந்த வகையில் மருத்துவமனை நிர்வாகத் துக்குத் தெரியாமல் அவர்களது அனுமதியைப் பெறாமல் ஒரு புத்தர் சிலையை வைத்திருப்ப தென்பது ஏற்றுக்கொள்ள முடி யாத கண்டனத்துக்குரிய நிகழ் வாகப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகா ணங்களை பௌத்த மயமாக் கும் ஒரு நிகழ்ச்சி நிரல் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கிறது. அந்தவகையில் கடந்த அரசாங்கத்தில் கூட வடமாகாணத்தின் சுகாதாரப் பணிப்பாளராக ஒரு சிங்களவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப் பட்ட பொழுது அவர், யாழ்ப் பாண வீதிக ளில், சுற்றுவட் டங்களில் புத்தர் சிலையை நிறுவி யதன் காரண மாக ஏற்பட்ட எதிர்ப் பின் பிரகாரம் உடனடியாக அவருக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கப் பட்ட தாக அறிந்தி ருக் கிறேன்.

அந்த வகையில் புதிதாக இந்த நாட்டில் உரு வாகியிருக்கின்ற அரசாங்கம் சாதி, மத, இன பேதமற்ற ஓர் இலங்கையை உரு வாக்க வேண்டும் என்ற கோசத்துடன் ஆட்சி யைப் பிடித்திருக்கின் றார்கள்.



இவர்களும் தொடர்ச் சியாக இப்படி தமிழர் பிரதேசங்களை பௌத் தமயமாக்கும் வேலை யைச் செய்து கொண் டிருக்கின்றார்களா?, அல்லது அரசாங் கத்துக்கு அபகீர்த்தியை ஏற் படுத்த வேண்டும் என்ற தோர ணையில் இந்த தாதியர் பயிற் சிக் கல்லூரியின் அதிபர் செயல் படுகின்றாரா? என்ற கேள்வி எங்கள் மத்தியில் எழுந்திருக் கின்றது.


எது எவ்வாறாயினும் வடக்கு - கிழக்குப் பிரதேசம் என்பது தமிழ், முஸ்லிம், சிங்க ளவர்கள் கணிசமாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் மட்டக் களப்பு போதனா மருத்துவ மனைக்குள் அனுமதியின்றி ஒரு புத்தர் சிலையை நிறுவியிருப் பதை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. மருத்து வமனை நிர்வாகம் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு அங்கிருக்கும் பதற்ற நிலை மையை தவிர்ப்பது மாத்திர மல்லாமல் இந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது விடயமாக கூடுதலான கரிசனையை எடுத்து அங்கு ஏற்படவிருக்கும் பதற்ற நிலையை முடிவுக்குக் கொண் டுவர வேண்டும்.

இல்லாவிட்டால் தொடர்ச் சியாக இப்படியான சம்பவங் கள் குறிப்பாக கிழக்கு மாகா ணத்தில் நடைபெறுவதற்கு ஏதுவாக அமைந்துவிடும். எனவே, இந்த மக்கள் மீது அக்கறை கொண்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என் பது என்னுடைய எண்ணம் மாத்திரமல்ல, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பணிபுரியும் ஏனையோரினதும் தமிழர்களினதும் ஆதங்கமாக பார்க்கப்படுகிறது.

எனவே, உடனடியாக மக் களால் தெரிவு செய்யப்பட்டி ருக்கும் பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையை முடிவுக்குக் கொண் டுவர வேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்"- என்றார்.

போலித் தீர்வுகள் வேண்டாம்

# பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்திப் போராட்டம்



ஒலுவில், டிசெ. 14

அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தித் தருமா றும், இடநெருக்கடிக்குத் தீர்வு காணுமாறும் வலியுறுத்தி ஒலு வில் தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு பல்கலைக்கழக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பல்கலைக்கழக வளாக பிரதான வீதிக்கு அரு கில் கவனவீர்ப்பு போராட்டத் தில் ஈடுபட்டு பின்னர் வளாகத் தினுள் ஊர்வலமாக தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட் டனர்.

சுமார் 250 மாணவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட் டனர். இதன்போது, பல்வேறு கோசங்களை அவர்கள் எழுப் பினர்.

தமக்கு அடிப்படை வசதி களை விரைவாக ஏற்படுத்தித் தருமாறும், போலித் தீர்வுகள் வேண்டாம், விடுதி வசதிகளை விரிவுபடுத்து, தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்க ழகத்தினுள் உடனடியாக அழைக்கவும், மாணவர்களை துன்புறுத்தாதே, மணவர்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்து போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# திடீரென படகு கவிழ்ந்து விபத்து மட்டக்களப்பில் மீனவர் மரணம்!

மட்டக்களப்பு, டிசெ. 14

மட்டக்களப்பு முகத்து வாரம் கடல் பகுதியில் மீன்பி டிப் படகு கவிழ்ந்து மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந் ததுடன் மற்றொருவர் காப்பாற் றப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது. திராய்மடு முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 34 வயது டைய இரண்டு பிள்ளை களின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மட்டக்களப்பு முகத்துவா ரம் பகுதியிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் கடலுக்கு மீன் பிடிக்க நேற்று முன்தினம் இரவு இருவர் சென்றனர்.

மீன்பிடித்துவிட்டு மீண்டும் இன்று அதிகாலை முகத்துவா ரம் கரைக்குத் திரும்பிக்கொண் டிருந்தபோது படகு திடீரென கவிழ்ந்ததையடுத்து, ஒருவர் காப்பாற்றப்பட்டதுடன் மற் றொருவர் நீரில் மூழ்கி உயிரி ழந்தார்.

இதனையடுத்து, உயிரிழந்த வரின் உடலை மீனவர்கள் மீட்டு கரைக்கு கொண்டுவந் தனர். இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைக ளில் கொக்குவில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

(எ)

# மக்களுக்கு நிவாரணம் வழங்க 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டது

பொத்துவில், டிசெ. 14

வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பொத்துவில் பிரதே சத்துக்கு முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வக்ப் சபை இணைந்து முஸ்லிம் தர்ம நிதி யில் இருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட் டது.

அண்மையில் ஏற்பட்ட மிகப் பெரும் வெள்ள அனர்த் தம் காரணமாக நாட்டின் பல் வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டு, பல கோடி ரூபாய் பெறு மதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டது.

அந்தவகையில் பொத்துவில் பிரதேச மக்களுக்கு நிவாரண் உதவி வழங்கும் முகமாக கொள்ளுபிட்டி பள்ளிவாசல் கள் சம்மேளனம் இலங்கை வக்ப் சபைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு இந்த நிதி ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது காசோலையாக திணைக்களப் பணிப்பாளர் எம். எஸ். எம். நவாஸால் கொள் ளுப்பிட்டி பள்ளிவாசல் சம்மே ளனத் தலைவர் றிஸான் ஹூ சைனிடம் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம். எஸ். எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம். எஸ். அலா அஹமட், திணைக்கள வக்ப் பிரிவு பொறுப்பாளர் ஏ. எஸ். எம். ஜாவித், வக்ப் நியாய சபை செயலாளர் எம். என். எம். ரோஷன் மற்றும் கொள்ளுப் பிட்டி சம்மேளனத் தலைவர் றிஸான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)

# அட்டாளைச்சேனையில் நேர்முகப் பரீட்சைக்கு ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்

## பிரதமரிடம் உதுமாலெப்பை எம். பி. கோரிக்கை



அட்டாளைச்சேனை, டிசெ. 14

அட்டாளைச்சேனை ஆசிரி யர் பயிற்சி கலாசாலையில் தமிழ், ஆங்கிலம், உடற்கல்வி, ஆரம்பக்கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இஸ் லாம் பாடங்களுக்கான பயிற்சி பெறும் ஆசிரியர்கள் விண் ணப்பிக்க முடியும் என வர்த்த மானியில் குறிப்பி டப்பட்டுள்ள நிலையில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலா சாலைக்கு விண்ணப் பித்த அனைத்து பயிற்சி ஆசிரியர்களுக்கும் வெவ் வேறு ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளதால் பயிற்சி ஆசிரி யர்கள் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை யில் மேற்படி ஆசிரியர்களின் பயிற்சிகளுக்கான அனுமதியை வழங்க வேண்டும் என திகாம டுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமா லெப்பை பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்து வில் பிரதேசத்துக்கான புதிய கல்வி வலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் கல்வி அமைச் சால் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்ட நிலையில் பொத்துவில் பிரதேசத்துக்கான புதிய கல்வி வலயத்துக்கு இதுவரை அனு மதி கிடைக்கவில்லை. எனவே, பொத்துவில் பிரதேசத்துக்கான புதிய கல்வி வலயத்தை அமைப் பதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும் பிரதமரிடம் உதுமாலெப்பை எம். பி. கோரிக்கை விடுத்தார்.

இந்த இரு விடயங்கள் தொடர் பில் உரிய நடவடிக் கைகள் மேற் கொள்ளப்படும் என்று பிரதமர் தெரிவித்ததாக உதுமாலெப்பை எம். பி. கூறினார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 இராணுவ பட்ஜெட்டுக்கு 884 பில்லியன் டொலர் ஒதுக்கீடு

## அனுமதி வழங்கியது அமெரிக்க பாராளுமன்றம்

வாஷிங்டன், டிசெ. 14

**2025 ஆம் ஆண்டு இராணுவ வரவு - செலவுத் திட்டத்துக்கு 884 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்ய அமெரிக்க பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.**

இது தொடர்பான வாக்கெடுப்பின்போது, 281 எம்.பிக்கள் ஆதரவாகவும், 140 எம். பிக்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

இதன்படி, இந்தோ - பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் இருப்பை அதிகரிப்பது, இராணுவ ஊதியத்தை அதிகரிப்பது, ஏழு புதிய கப்பல்களை உருவாக்குவது மற்றும் நாட்டின் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் இராணுவ பட்ஜெட்டில் இடம்பெறவுள்ளன. பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கிய நிலையில், அடுத்ததாக செனட் சபையின் ஒப்புதலுக்காக இந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப்படும்.

இது குறித்து சபாநாயகர் மைக் ஜோன்சன் கூறுகையில், “அமெரிக்காவையும், அதன் நலன்களையும் பாதுகாக்கும் முக்கிய இராணுவ பணிகளில் இந்த பட்ஜெட் கவனம் செலுத்தும். இது இராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வில் சிறப்புமிக்க முதலீடுகளை செய்யும்”- என்றார். (எ)

# 24 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி

புதுடில்லி, டிசெ. 14

அடுத்த 24 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகவுள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதன்படி, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட தென்தமிழக மாவட்டங்களில் அதிகாலை முதல் பல்வேறு இடங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்து குடியிருப்புகளை சூழ்ந்துள்ளது.

தொடர் மழையால் தென்காசி மாவட்டத்தில் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் அபாய அளவை தாண்டி ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# 200 உக்ரைன் படையினர் ஒரே நாளில் உயிரிழப்பு!

கீவ், டிசெ. 14

24 மணி நேரத்தில் உக்ரைன் ஆயுதப்படைகள் 200இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை இழந்தன என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது.

உக்ரைனின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது. எனினும், அவற்றை பின்னர் உக்ரைன் பதிலடி கொடுத்து மீட்டது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தூதரக மற்றும் அமைதி பேச்சுகள் நடத்தப்பட்டன. ஆனால், அதில் பலன் ஏற்படவில்லை.

போரில் அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளின் ஆதரவை உக்ரைன் அரசு கோரி வருகின்றது. இதற்கேற்ப, அந்த நாடுகளும் இராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. இதேபோன்று, வடகொரியா, ரஷ்யாவுக்கு இராணுவத் தளவாடங்கள் மற்றும் படையினரை அனுப்பி மறைமுக உதவி செய்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைன் ஆயுதப் படைகள் குர்ஸ்க் பகுதியில் நேற்றுக்காலை 11 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 200இற்கும் மேற்பட்ட படையினரை இழந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது. (எ)

பாக். தீவிரவாத அமைப்புடன் தொடர்பு

# 5 மாநிலங்களில் 19 இடங்களில் என். ஐ. ஏ. அதிகாரிகள் சோதனை

புதுடில்லி, டிசெ. 14

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு சொந்தமான 19 இடங்களில் என். ஐ. ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த, தடை செய்யப்பட்ட ஜெய்ஷ் - இ- முகமது தீவிரவாத அமைப்பு இந்தியாவில் தீவிரவாத தாக்குதலை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக இங்குள்ள இளைஞர்களை தீவிரவாத செயலில் ஈடுபட ஊக்குவித்து வருவதுடன் தீவிரவாதத்தை பரப்பி வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ) அதிகாரிகள் அசாம், மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், டில்லி மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய 5 மாநிலங்களுக்குட்பட்ட 26 இடங்களில் கடந்த ஒக்ரோபர் மாதம் சோதனை நடத்தினர். இதில் ஷேக் சுல்தான் சலா உத்தின் அயுபி கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அயுபியிடம் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவல் மற்றும் கைப்பற்றப்பட்ட சில ஆவணங்களின் அடிப்படையில், ஜம்மு காஷ்மீர், அசாம், மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய 5 மாநிலங்களுக்குட்பட்ட 19 இடங்களில் என். ஐ. ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதில், துண்டு பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைகள், மின்னணு சாதனங்கள் உள்ளிட்டவற்றை என். ஐ. ஏ. அதிகாரிகள் கைப்பற்றியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# பாராளுமன்றம் தாக்கப்பட்டதன் 23ஆம் ஆண்டு தினம் அனுஷ்டிப்பு

## உயிர்நீத்தவர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி

புதுடில்லி, டிசெ. 14

இந்தியாவின் பாராளுமன்றம் மீது தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டபோது உயிரிழந்தவர்களின் 23ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் பாராளுமன்றத்தின் மீது நடத்திய தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பாராளுமன்றம் தாக்கப்பட்டதன் 23ஆம் ஆண்டை முன்னிட்டு இந்த தாக்குதலில் உயிர்த்தியாகம் செய்தவர்களின் புகைப்படங் கள் பாராளுமன்ற வளாகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தது.



இந்த படங்களுக்கு குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா. ஜ. க. தலைவர் ஜே. பி. நட்டா, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். (எ)

# அமெரிக்க வரலாற்றில் முதல்முறை 1500 பேருக்கு தண்டனை குறைப்பு

வாஷிங்டன், டிசெ. 14

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அடுத்த மாதம் பதவி விலகவுள்ள நிலையில், ஒரே நாளில் சுமார் 1500 பேரின் தண்டனைகளை குறைத்துள்ளார். 19 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். இது தொடர்பில் வெள்ளை மாளிகை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி, கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்த போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1500 தண்டனை கைதிகளின் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. வன்முறையற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 பேருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் அதிக நபர்களுக்கு கருணை காட்டப்பட்டுள்ளது. (எ)

# தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய தீர்மானம்

சியோல், டிசெ. 14

தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் மீண்டும் புதிய தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன.

தென்கொரியாவில் கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இது தொடர்பில் தொலைக்காட்சியில் உரையாற்றிய யூன் சுக் இயோல், வடகொரிய கம்யூனிஸ்ட் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக தென்கொரியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாக தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை தென்கொரிய ஜனாதிபதி வாபஸ் பெற்றார். இதனைத் தொடர்ந்து தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்தன.

ஆனால், அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆளுங்கட்சியினர் புறக்கணித்ததால், தீர்மானம் தோல்வியடைந்தது. இந்த நிலையில், தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி மற்றும் 5 சிறிய கட்சிகள் இணைந்து மீண்டும் புதிய தீர்மானத்தை தாக்கல் செய்தன. இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (எ)

# காஸாவில் அகதிகள் முகாம்மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

## 7 குழந்தைகள் உட்பட 28 பேர் பலி

காஸா, டிசெ. 14

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 7 குழந்தைகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். காஸாவில் ஹமாஸ் அமைப் பினர் உட்பட 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இஸ்ரேலில் தாக்குதலில் இதுவரை உயிரி ழந்தனர். இந்த நிலையில், மத் திய காஸாவில் உள்ள நுசிராத் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழித் தாக்குதலில் 7 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 28 பேர் கொல் லப்பட்டதாக பலஸ்தீனிய மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி

## கடைசி போட்டியிலும் பங்களாதேஷ் அணி படுதோல்வி




செயின்ட் கிட்ஸ், டிசெ.14

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவதும் கடைசியுமான போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கு இந்திய தீவுகள் அணி, ஒருநாள் தொடரை 3 - 0 என முழுமையாக கைப்பற்றியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடர் 1 - 1 என சமனில் முடிந்தது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் முதல் இரு ஆட்டங்களிலும் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்று ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நடைபெற்றது . இதில், முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி தொடக்கம் முதல் அதிரடியாக விளையாடியது . இதனால் 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 321 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் மஹ்மதுல்லா 84 ஓட்டங்களும், மெஹதி ஹசன் 77 ஓட்டங்களும், சவுமியா சர்கார் 73 ஓட்டங்களும் எடுத்தனர். தொடர்ந்து 322 ஓட்டங்கள் என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி விளையாடியது .

அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தனர் . கீசி கார்டி, அமீர் ஜாங்கு ஆகியோர் பந்துகளை பௌண்டரிக்கும், சிக்ஸருக்கும் பறக்க விட்டனர். இறுதியில் 45. 5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 325 ஓட்டங்கள் எடுத்து மேற்கு இந்திய தீவுகள் அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அமீர் ஜாங்கு சதமடித்து அசத்தினார். கீசி கார்டி 95 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியால் ஒருநாள் தொடரை 3 - 0 என முழுமையாக மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. (எ)

# உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் வெற்றிபெற்றார் தமிழக வீரர் குகேஷ்

சிங்கப்பூர், டிசெ.14

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் தமிழக வீரர் குகேஷ் வெற்றிபெற்றார்.

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வந்தது. 14 சுற்றுக் கொண்ட இந்தப் போட்டியில் 13 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், குகேஷும், லிரெனும் தலா இரு ஆட்டங்களில் வெற்றி பெற்றிருந்தனர். மற்ற அனைத்து ஆட்டங்களும் சமநிலையில் முடிந்தன.

இந்த நிலையில், 14ஆவது மற்றும் கடைசி சுற்று நடைபெற்றது. இதில் குகேஷ், கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். இந்த நிலையில் சற்றும் எதிர்பாரா வகையில், 58ஆவது நகர்த்தலில் டிங் லீரெனை வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்றார். டிங் லீரென் செய்த சிறிய தவறை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட குகேஷ் வெற்றிபெற்று அசத்தினார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார். (எ)




# நியூசிலாந்து - இங்கிலாந்து இறுதி டெஸ்ட் இன்று ஆரம்பம்

ஹாமில்டன், டிசெ. 14

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி இன்று அதிகாலை 03. 30 மணியளவில் தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டிக்கான ஆடும் அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது. அந்த அணியில் ஒரே ஒரு மாற்றமாக கடந்த போட்டியில் விளையாடிய கிறிஸ் வோக்சுக்கு பதிலாக மேத்யூ பாட்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜாக் கிராலி, பென் டக்கெட், ஜேக்கம் பெத்தேல், ஜோ ரூட், ஹாரி புரூக், ஒல்லி போப், பென் ஸ்டோக்ஸ் (தலைவர்), கஸ் அட்கின்சன், மேத்யூ பாட்ஸ், பிரைடன் கார்ஸ் மற்றும் ஷோயப் பஷீர் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். (எ)

## பங்களாதேஷ் - மே. இ. தீவுகள் ரி - 20 தொடர் நாளை தொடக்கம்

ஜமைக்கா, டிசெ. 14

பங்களாதேஷ் - மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் நாளை தொடங்குகிறது.

பங்களாதேஷுக்கு எதிரான ரி - 20 போட்டித் தொடரில் விளையாடவுள்ள மேற்கு இந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நாளை 15ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடரில் விளையாடவுள்ள மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு ரோவ்மன் பவல் தலைவராகவும், பிரண்டன் கிங் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீசி கார்டி, ஜோன்சன் சார்லஸ், ரோஸ்டன் சேஸ், ஜஸ்டின் கீரிவஸ், டெரன்ஸ் ஹிண்ட்ஸ், அல்ஜாரி ஜோசப், எவின் லூயிஸ், ஒபெட் மெக்காய், குடகேஷ் மோடி, நிக்கோலஸ் பூரன், ரொமாரியோ ஷெப்பர்ட், ஷமர் ஸ்பிரிங்கர், அகேல் ஹொசைன் (முதல் இரு போட்டிகளுக்கு மட்டும்), ஜெய்டன் சீல்ஸ் (3ஆவது போட்டிக்கு மட்டும்) ஆகியோர் அணியில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

## தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

டர்பன், டிசெ. 14

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி - 20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. அடுத்ததாக ஒருநாள் தொடரும், இறுதியில் டெஸ்ட் தொடரும் நடைபெறவுள்ளது.

இதன்படி, இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்த ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பவுமா தலைமையிலான அந்த அணியில் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா நீண்ட நாட்கள் கழித்து இடம்பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணி வருமாறு, பவுமா (தலைவர்), ஒட்னீல் பார்ட்மேன், டோனி டி சோர்ஜி, மார்கோ ஜான்சன், கிளாசென், கேசவ் மகராஜ், மபாகா, மார்க்ரம், டேவிட் மில்லர், ஆண்டிலே பெஹ்லுக்வாயோ, ககிசோ ரபாடா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன், தப்ரைஸ் ஷம்சி, ரஸ்ஸி வான் டெர் துசென் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். (எ)

## இந்தியா - அவுஸ்திரேலியா மூன்றாவது டெஸ்ட் இன்று

பிரிஸ்பேன், டிசெ. 14

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டி கள் கொண்ட பார்டர் - கவாஸ்கர்கிண்ண டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில், பெர்த்தில் நடந்த முதலாவதுடெஸ்டில் இந்தியா 295 ஓட்டங் கள் வித்தியாசத்திலும், அடிலெய்டில் நடந்த 2ஆவது டெஸ்டில் அவுஸ் திரேலியா 10 விக்கெட்கள் வித்தியா சத்திலும் வெற்றி பெற்றன. இதனால், இந்தத் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநி லையில் உள்ளது. இதனைய டுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 05. 50 மணிக்கு தொடங்குகிறது. இதை யொட்டி இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடு பட்டு வருகின்றனர்.இந்த நிலை யில் இந்தப் போட்டிக் கான அவுஸ்திரேலியாவின் ஆடும் அணி அறிவிக்கப்பட் டுள்ளது. காயம் காரணமாக கடந்த போட்டியிலிருந்து விலகிய வேகப் பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் அணிக்குத் திரும் பியுள்ளார். மற்றபடி அனைத்து வீரர்களும் அணியில் தொடர்கின்றனர். உஸ் மான் கவாஜா, நாதன் மெக்ஸ் வீனி, மார்னஸ் லபு ஷேன், ஸ்டீவ் சுமித், ட்ராவிஸ் ஹெட், மிட்செல் மார்ஷ், அலெக்ஸ் ஹரி, பட் கம்மின்ஸ் (தலைவர்), மிட்செல் ஸ்டார்க், நாதன் லயன் மற்றும் ஜோஷ் ஹேசில்வுட் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட...

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாம் பட்டப் படிப்பை நிறைவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றபோதிலும் அரச வேலை வாய்ப்பு தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும், புதிய அரசாங்கம் தமக்கான அரச நியமனத்தை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (அ)

## அரிசி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அரிசி ஆலை உரிமையாளர்களின் ஏகாதிபத்திய போக்கு தொடர்பில் கடந்த காலங்களில் பரவலாக பேசப்பட்டது. அது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தற்போது பிரதான பங்குதாரராக இருக்கும் சுனில் ஹந்துன்நெத்தி போன்றோர் கடந்த அரசாங்கங்களை மிகக் கடுமையாக தூற்றினர்.

தாம் ஆட்சிக்கு வந்தால் அரிசி வர்த்தகத்தில் உள்ள மாபியாவை இல்லாதொழிப்பதாக சூளுரைத்தனர். அனைத்து ஆலைகளையும் பரிசோதித்து உரிய வகையில் அரிசி விநியோகம் இடம்பெறுவதை உறுதிசெய்வதாக கூறினர்.

எனினும் இன்று என்னவாயிற்று? அரசாங்கத்தால் உரிய வகையில் மக்களுக்கான அரிசியை வழங்க முடியவில்லை. உரிய திட்டமிடலும் அனுபவம் இன்மையும் இதற்குக் காரணமாகும்.

என்னைப் பொருத்தவரையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரிசி ஆலை உரிமையாளர்களிடம் அடிபணிந்துவிட்டார் என்றே கூறுவேன் - என்றார். (அ)

## செம்மலை...

கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அதனையடுத்து, தனியார் நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இளையதம்பி தணிகாசலம், நாயாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி பொது மக்கள் மேற்கொண்டனர். (அ)

## பயங்கரவாத...

வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் ம்தெரிவிக்கையில்-

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையின் மீது நம்பிக்கையை கட்டியெழுப்புவது என்பது அரசாங்கம் என்ற அடிப்படையில் எங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மீது மீண்டும் நம்பிக்கயை கட்டியெழுப்பவேண்டும்.

அது அவ்வளவு இலகுவான விடயமல்ல. இந்த நிறுவனங்கள் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது.

சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். அதேபோன்று வெளிப்படைத்தன்மையும் இருக்கவேண்டும்.

எங்களுக்கும் மக்களின் பெரும்பான்மை விருப்பம் கிடைத்துள்ளது. அதற்காக நாங்கள் தன்னிச்சையான தீர்மானம் எடுப்போம் என்று கூறவில்லை.

நாங்கள் எந்தத் தீர்மானம் எடுத்தாலும் சகலருடனும் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானம் எடுப்போம் - என்றார். (அ)

## பதவியை...

கட்சியினர் சபாநாயகர் தனது கலாநிதிப் பட்டம் குறித்து தெளிவுபடுத்தலை வழங்கவேண்டும் எனக் கோரினர்.

இந்த விவகாரம் தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் பெரும் நெருக்கடிநிலையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையிலேயே அவர் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

"கடந்த சில நாட்களாக எனது கல்வித் தகுதி குறித்து சமூகத்தில் ஒரு பிரச்னை எழுப்பப்பட்டுள்ளது. எனது கல்வித் தகுதி குறித்து நான் தவறான அறிக்கை எதையும் வெளியிடவில்லை.

ஆனால் தற்போது அந்த கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சில ஆவணங்கள் என்னிடம் இல்லாததாலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அவற்றைப் பெற வேண்டியிருப்பதாலும், உடனடியாக அந்த ஆவணங்களை விரைவாக சமர்ப்பிப்பது கடினமாகியிருக்கிறது.

எனக்கு பட்டம் வழங்கிய ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து இது சம்பந்தமான கல்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் இயலுமை என்னிடம் உண்டு, அவற்றை விரைவில் சமர்ப்பிக்க முடியும் என்று நம்புகிறேன்.

எவ்வாறாயினும், நிலைமையைக் கருத்தில் கொண்டு, அரசாங்கத்திற்கும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளேன் என்பதை இதன்மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். " என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு எதிரணிகள் தீர்மானித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்...

முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டது.

குறித்த கூட்டத்தில் இம்முறை பாராளுமன்றதுக்கு தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா அதிகாரிகளை விழித்த வார்த்தைகள் சபை ஒழுங்குக்கும் கூட்டம் ஒழுங்குக்கும் முரணாக இருப்பதாக பெயர் குறிப்பிடாத அதிகாரி ஒருவர் குற்றச்சாட்டினார்.

நகர அபிவிருத்தி தொடர்பான விவாதத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, துறை சார்ந்த பெண் உயர் அதிகாரி ஒருவரை 'அன்ரி' உங்கள் முகம் வியர்க்கிறது உங்களுக்கு திட்டமிடல் என்றால் என்ன என்று தெரியுமா என கேட்டார்.

அதுமட்டுமல்லாது யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை 'தங்கம்' , 'முத்து' என அடிக்கடி கூறியதுடன் அவரின் கல்வித் தகமை தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

மாகாண அதிகாரி ஒருவரை படையப்பா படம் பார்த்தீர்களா? பத்து மில்லியனை 10 நாளில் எப்படி செலவளிப்பீர்கள் என தனக்கு கூறுமாறு அடிக்கடி குறுக்கீ செய்து கேள்விகளை தொடுத்தார்.

அது மட்டுமல்லாது யாழ். மாவட்டத்தில் திட்டங்களை வகுக்கும்போது உங்கள் கல்வி அறிவு போதாது என அதிகாரிகளை விமர்சித்ததுடன் அவ்வாறு தேவைப்பட்டால் என்னிடம் வாருங்கள் கற்றுத் தருகிறேன் எனக் கிண்டல் அடித்தார்.

இவ்வாறான நிலை ஏற்பட்டபோது அமைச்சர் சந்திரசேகர் மற்றும் வட மாகாண ஆளுநர் என்.வேதநாயகன் மற்றும் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினரை கட்டுப்படுத்தாது வேடிக்கை பார்த்தனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-05)

# கல்வி, சுகாதாரம், விவசாயம் குறித்து யாழ். அபிவிருத்தி கூட்டத்தில் கவனம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்று காலை நடைபெற்றது.

இன்றைய கூட்டத்தில், கிராமிய அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக யாழ்.மாவட்டத்தில் தற்போது பரவிவரும் எலிக்காய்ச்சல் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், இராமநாதன் அர்ச்சுனா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கருணாநாதன் இளங்குமரன், எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா, ஜெ.ரஜீவன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் , மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## யாழ்.மாவட்டத்தில்...

இதுவரை 58 பேர் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மொத்தமாக 7 இறப்புகள் பதிவாகியுள்ளன. அதில் 6 இறப்புகள் யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் பதிவாகியுள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

முதலாவது, பொதுமக்கள் ஒரு நாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அரச வைத்தியசாலைக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஏனெனில், கடந்த நாள்களில் ஏற்பட்ட இறப்புகள் மிகவும் தாமதமாக வைத்தியசாலைக்கு வந்த காரணத்தால் ஏற்பட்டுள்ளன.

உடனடியாக வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பூரண குணமடைவதை அவதானிக்க முடிகின்றது. எனவே மீண்டும் வலியுறுத்துகின்றோம். ஒரு நாள் காய்ச்சல் வந்தாலும் அரசாங்க வைத்தியசாலைக்கு உடனடியாக செல்லுங்கள்.

இன்று முதல் நாங்கள் ஆபத்தை எதிர்நோக்கும் நோயாளர்களுக்கு ' 'ரொக்ஸி சைக்கிளின்' என்கின்ற தடுப்பு மாத்திரையை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். விவசாய திணைக்களத்துடன் இணைந்து, விவசாய அமைப்புக்களின் உதவியுடன் விவசாயிகளுக்கு இந்த தடுப்பு மருந்துகளை வழங்குகின்றோம்.

அத்துடன், பொது சுகாதார பரிசோதகர்கள் களவிஜயம் மேற்கொண்டு காச்சலுடன் இருப்பவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு இந்த தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்பொழுது சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவிலிருந்து விசேட வைத்திய அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று வருகை தந்திருந்தது. அவர்கள் நேற்று முன் தினம் யாழ்ப் ாணம் யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது அவர்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், அதனைத் தொடர்ந்து கரவெட்டி மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக மற்றுமொரு விசேட வைத்திய நிபுணர்கள் குழு கொழும்பு தொற்றுநோய் தடுப்பு பிரிவிலிருந்து வருகை தருகின்றனர். அவர்களும் இணைந்து கள ஆய்வு மேற்கொள்வார்கள். எவ்வாறு இந்த பரவலை கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் ஆலோசனைகளை வழங்கவுள்ளனர் - என்றார். (அ-02)

## கட்சி...

அவதானிக்க முடிந்தது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்ட கலந்துரையாடலின்போது இவ்வாறான நிலை காணப்பட்டது. இந்த கூட்டம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச் சர் சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்த பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முதலாவது மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அரச கட்சியை சேர்ந்த பல ஆதரவாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடல்களில் கட்சி ஆதரவாளர்கள் உள்வாங்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் தற்போதும் இவ்வாறான நிலை காணப்படுகிறது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராக பதில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நம்பிக்கையில்லா...

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் சபாநாயகராக பதவியேற்றுக்கொண்டபோதும் தன்னை கலாநிதி என்றே அடையாளப்படுத்திக் கொண்டார்.

ஆனால் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலில் பட்டம், ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றிருப்பதாக குறிப்பிட்டு அவரது பெயருடன் கலாநிதி என்ற பட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்களிடம் இருந்து ஆட்சேபனை எழுந்த சந்தர்ப்பத்திலும், இது தொடர்பான தகவல் கேட்டபோது மௌனம் காத்து, உண்மையை மறைத்துள்ள காரணங்களினால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை 3ஆவது பகுதியில் பிரிவு 6 இன் பிரகாரமும், அந்த நடத்தைக் கோவையின் 5ஆவது பிரிவின் நெறிமுறைகளின் பிரகாரம் உள்ள நடத்தை விதிகளின்படி இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மீறப்பட்டுள்ளமை மற்றும் பாராளுமன்றம், அரசியலமைப்பு மற்றும் அவரால் நேரடியாகத் தலைமை தாங்கப்படும் ஏனைய உயரிய நிறுவனங்களினதும் நம்பிக்கையை மீறியுள்ளமை என்பவற்றால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.சி.அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய் பெரேரா, சதுர கலப்பதி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கைச்சாத்திட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கான உரத்தை தடுத்தது ஐரோப்பிய நாடு

## ரஷ்ய தூதுவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்ட உரத்தை வழங்குவதை ஐரோப்பிய ஒன்றிய நாடு தடுத்து வைத்தது என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலவசமாக இலங்கைக்கு உரங்களை வழங்குவதை ஐரோப்பிய ஒன்றியம் தடுத்தது என தெரிவித்துள்ள அவர், இந்த உரம் வந்து சேருவதற்கு ரஷ்ய தூதரகம் இரண்டரை வருடங்களாக காத்திருந்தது எனவும் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு விதித்துள்ள சட்ட விரோத தடை காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடான லட்வியாவில் இந்த உரங்கள் தடுக்கப்பட்டன என குறிப்பிட்டுள்ள அவர், இறுதியாக நாங்கள் எங்கள் நண்பர்களுடன் இணைந்து இந்த பிரச்னைக்கு தீர்வை கண்டோம். உரங்கள் இலங்கை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன என குறிப்பிட்டார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியை மறுசீரமைக்கவேண்டும்!

## திஸ்ஸ அத்தநாயக்க கருத்து



கொழும்பு, டிசெ. 14

“பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும் ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் மறுசீரமைக் கப்படவேண்டும். அவ்வாறு அல்லாவிட்டால் தற்போதைய பலமான அரசுடன் அரசியல் ரீதியில் மோதுவதென்பது பெரும் சவாலாகவே அமையும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது: -

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும். இதனை வலியுறுத்தும் வகையிலேயே கடந்த தேர்தல் முடிவுகள் அமைந்தன. எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் இடம்பெறவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு நடக்க வேண்டும் என நானும் வலியுறுத்துகின்றேன். புதிய மாற்றமொன்றை நாம் மக்களுக்கு காட்டியாக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள அரசுடன் அரசியல் சமரில் வெல்வது சவாலாக அமையும்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணி உடைவதை நாம் விரும்பவில்லை. அதனால்தான் கலந்துரையாடல் மூலம் தேசியப்பட்டியல் பிரச்சினையைத் தீர்த்தோம் - என்றார். (அ)

# தேங்காய் எண்ணெய் விலையும் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 14

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

அதன்படி, ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 800 ரூபாவாக புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் நேற்று முன் தினம் ஏற்பட்ட தேங்காய் விலை உயர்வினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. தேங்காயின் விலை அதிகரிப்பு காரணமாக உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தற்போது சந்தையில் தேங்காய் ஒன்று 150 - 200 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

சந்தையில் தேங்காய்களை கொள்வனவு செய்து எண்ணெய் தயாரிப்பதன் மூலம், எவ்வித இலாபமுமடைய முடியாதென அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதம அழைப்பாளர் புத்திக டி சில்வா தெரிவித்தார். (அ)

# வடக்கில் மயக்க மருந்து கொடுத்து நகைகள், வாகனம் திருடும் கும்பல்!

## வவுனியா பொலிஸாரிடம் சிக்கியது

வவுனியா, டிசெ. 14

**வடக்கு மாகாணத்தில் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களைத் திருடும் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.**



நாடு முழுவதும் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது. அது போல வடக்கிலும் அவ்வாறான குழு ஒன்று செயற்பட்டு வந்தது.

அந்தக் குழுவால், வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, அதன் சாரதிக்கு மயக்க மருந்தைக் கொடுத்து கீழே விழுத்திவிட்டு குறித்த முச்சக்கரவண்டியை கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த முச்சக்கர வணடிக்கு நீல நிற வர்ணப்பூச்சு பூசி வாகன இலக்கத்தகடு மாற்றப்பட்டு விற்பனை செய்திருந்தமை தெரியவந்ததையடுத்து குறித்த முச்சக்கர வண்டி மீட்கப்பட்டது.

அத்துடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வடக்கில் இடம்பெற்ற மேலும் சில குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டமை தெரிய வந்துள்ளது. வவுனியா, உளுக்குளம் பகுதியில் வைத்து முச்சக்கர வண்டி சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்துவிட்டு அவரது ஒன்றே கால் பவுண் மோதிரத்தை திருடிச் சென்றமை தெரிய வந்துள்ளது.

மேலும், மன்னார், அடம்பன் பகுதியில் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து ஒன்றே கால் பவுண் மோதிரத்தை திருடிச் சென்றமை மற்றும் மல்லாவி பகுதியில் டிப்பர் சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து 2 பவுண் சங்கிலியை திருடிச் சென்றமை என்பனவும் தெரிய வந்துள்ளன.

இதனையடுத்து, திருடப்பட்ட நகைகள் விற்கப்பட்ட இடத்தில் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு குறித்த இரு நபர்களிடம் இருந்தும் முச்சக்கர வண்டி மற்றும் நான்கரைப் பவுண் நகை என்பன மீட்கப்பட்டுள்ளன. இச் சம்பவம் தொடர்பல் ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 45 வயது நபரும், மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 47 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிககை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க விஜயம்!

கொழும்பு, டிசெ. 14

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தில், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுடன், சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையின் தலைவர் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் பல்வேறு ஊழியர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த கலந்துரையாடலின் போது விமான நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பிரச்னைகள் மற்றும் தேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில்-

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த பல வேலைத்திட்டங்கள் சட்டவிரோத கொடுக்கல், வாங்கல்கள் காரணமாக 2028 ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டுள்ளது - என்றார்.

பின்னர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க கட்டுநாயக்க விமான நிலையத்தின் அனைத்து இடங்களையும் பார்வையிட்டார். (அ)

# சிங்களவர்கள் பற்றி யாரும் பேசுவதில்லை

## சீலரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

நாட்டில் உள்ள சிங்கள மக்களை காப்பாற்றுவதற்கு பௌத்த பிக்குகள் அணிதிரள வேண்டும் என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் சிங்கள மக்கள் பற்றிப் பேசினால் இனவாதம் என்கிறார்கள், அடிப்படைவாதிகள் என்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்காக அர்ச்சுனா குரல்கொடுக்கிறார். முஸ்லிம்களுக்காக ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோர் பேசுகிறார்கள். ஆனால் சிங்களவர்களுக்காக யாரும் குரல் எழுப்புவதில்லை.

அவர்கள் அமைதியாகவே இருக்கிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள சிங்களவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக பௌத்த பிக்குமார் அணிதிரள வேண்டியது அவசியமாகும்.

இதேவேளை, நாடு முழுவதும் அரிசித் தட்டுப்பாடு நிலவுகிறது. நாட்டின் கடந்த அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அடிபணிந்துள்ளது-என்றார். (அ)

# கனடாவிலிருந்து வந்த கொள்கலனில் கஞ்சா!

கொழும்பு, டிசெ. 14

கனடாவில் இருந்து கொள்கலன் ஒன்றில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பார்சலில் கஞ்சா அடங்கிய 20 ரின்களை இலங்கை சுங்க அதிகாரசபை கண்டுபிடித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி கப்பலில் வந்த கொள்கலன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த போதைபொருள் மீட்க்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க ஊடக செயலாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

இந்த கஞ்சா கையிருப்பு வவுனியா மற்றும் களுத்துறை முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. களுத்துறை தெற்கு பகுதியில் உள்ள ஒருவருக்கு வந்த பார்சல் ஒன்றில் 08 ரின் கஞ்சா இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ளவருக்கு வந்த பார்சலின் எடை 1755 கிராம் என போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அறிக்கை தெரிவிக்கிறது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் கையிருப்பு மேலதிக விசாரணை மற்றும் தேவையான சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org